# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் - விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தஞ்சை தரணியில் காவிரி கரைபுரண்டதோ என திரண்ட கழகத்தினர் - விவசாயப் பெருங்குடி மக்கள்!






விவசாயக் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வலியுறுத்தியும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வலியுறுத்தியும் மேகதாது அணை கட்டுவதை தடுக்கத் தவறிய த.வெ.க. அரசைக் கண்டித்தும், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (03.08.2026 திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர் பனகல் கட்டிடம் அருகில், கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு அவர்கள் வரவேற்புரையில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமைக் கட்சியினர், கழக முன்னணியினர், விவசாய சங்கத்தினர், கழக விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணியினர், கழகத்தினர் அலைகடலெனத் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.